# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No.123/2020

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. செந்தில்குமார் | ஊர் | : | |
| க.பெ. | : | திரு. செல்வராஜ் | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18-ஆம் நாள் **வா.சா. 2 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி முருகானந்தம், பிரதிவாதி அப்துல் ஹக்கீம் ஆகியோரை தெரியும். 2ஆம் பிரதிவாதி நூர் பகீரா பேகத்தையும் தெரியும். முருகானந்தத்தை எங்கள்ஊருக்கு கறவை மாடு வாங்க வந்த வகையில் தெரியும். முருகானந்தம் நடுகாவேரியை சேர்ந்தவர் நான் கீழ புனல்வாசலை சேர்ந்தவர். அப்துல் ஹக்கீம் அம்மா என்னிடம் மாடு வாங்கினார்கள் அந்த வகையில் 20 வருடமாக தெரியும். அவர்கள் குடும்பத்தில் ஹக்கீம், அவருடைய தம்பி, தங்கை ஆகியோர் உள்ளார்கள். முருகானந்தத்திற்கும், ஹக்கீம்க்கும் என்ன வழக்கு என்று தெரியும். ஹக்கீம்இடம் விற்க முன்வந்தார் முருகானந்தம் அக்ரிமெண்ட் போட்டார். 16.11.2017இல் அந்த ஒப்பந்தம் ரூ.36,00,000த்திற்கு ஏற்பட்டது. முன்பணமாக 10 லட்சம் கொடுத்தார். மறுநாள் வீட்டிற்கு போய் ரூ6,00,000, அதற்கு அடுத்தநாள் ரூ.5,00,000 கொடுத்தார். 20ஆம் தேதி பவர் கொடுத்தார். கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து ஹக்கீம் அப்பா, அம்மா, தம்பி போட்டுள்ளார்கள். ஒப்பந்தம் வழக்கறிஞர் முகிலன் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யபட்டது. 20.11.2017 தேதியிட்ட பவர் பத்திரம் பத்திர பதிவாளர் அலுவலகத்தில் வைத்து ராஜராஜசோழன், வழக்கறிஞர் தயார் செய்து கொடுத்தார். ஆவணபதிவுக்கு நானும் போனேன். கிரைய ஒப்பந்தத்திற்கு நான்,

முருகானந்தம், ஹக்கீம், அவர் அப்பா, அம்மா, தம்பி ஆகியோர் வந்திருந்தார்கள்.நான் எந்த ஆவணத்திலும் சாட்சி கையெழுத்து போடவில்லை. இருவருக்கும் இடையில் நான்தான் இருந்தேன் அதனால் சாட்சி கையெழுத்து போடவில்லை. அவர்களுக்குள் ராசியாக இருந்ததால் பவர் கொடுக்கபோவதால் ரூ5,00,000, ரூ.6,00,000 கொடுத்ததிற்கு எந்த ஆவணமும் ஏற்படவில்லை.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள் இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.